## ★ அரசுக்கு எதிராக நாடாளுமன்றில் மீண்டும் நம்பிக்கையில்லா பிரேரணை


விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 10 இதழ் 71
யாழ்ப்பாணம் புதன்கிழமை 22 — 04 — 1992


(கொழும்பு)
முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை நாடாளுமன்ற சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகளின் தாக்குதலில் 7 படையினர் காயம்

[கொழும்பு]
திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற மோதல்களில் ஏழு இராணுவத்தினர் பலத்த காயம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கைப் பிரிக்க புதிய அமைப்பு உதயம்!

(கொழும்பு)
வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிக்கவேண்டுமெனக்கோருவதற்காக கிழக்கு மாகாணத்தில் புதிய முன்னணியொன்று அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

# “விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்கப்போவதில்லை”

## ஜனாதிபதி பிரேமா அறிவிப்பு

(கொழும்பு)
**விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனை இந்தியாவிடம் ஒரு போதும் தான் ஒப்படைக்கப்போவதில்லையென ஜனாதிபதி பிரேமதாசா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.**

இத்தகவலை இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது. ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்கும் விடயம் தொடர்பாக

(4-ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை கடலில் மேலும் ஒரு மீனவர் பலி

[யாழ்ப்பாணம்]
பருத்தித்துறை கடற்பகுதியில்கடற்படையினரால் பிடித்துச்செல்லப்பட்ட மீனவர்கள் பலர் திரும்பியுள்ளனர். இவர்களில் மேலும் ஒருவர் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பருத்தித்துறை கோவிலடியைச் சேர்ந்த பி. செல்லத்துரை [38 வயது] கடற்படையினரால் கொல்லப்பட்டார். மேலும் மூவரை மீனவ உறவினர்கள் கடலில் தேடி வருகின்றனர்.

மீனவர்கள் சென்ற கப்பல்கள், வலைகள், கடற்படையினரால் சேதமாக்கப்பட்டு கடலில் வீசப்பட்டுள்ளன.

[.50]

## பௌத்த பிக்குகள் - புலிகள் 3 சுற்று பேச்சு நடத்துவர்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கென இன்று மாலை யாழ்ப்பாணம் வரும் பௌத்த பிக்குகளுக்கும் புலிகளுக்குமிடையில் மூன்று சுற்று பேச்சுகள் நடைபெறும்.

முதல் சுற்றுப் பேச்சு நாளை நடைபெறலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்தில் தங்குவதற்கான

[4-ம் பக்கம் பார்க்க]

## ‘சிராவஸ்தி’ விடுதியில் எம். பிக்கள் பட்டினி

[கொழும்பு]
‘சிராவஸ்தி’ விடுதியில் தங்கியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கடந்த வாரம் முழுவதும் பட்டினியால் வாடினார்கள்.

அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் அனைவரும் புதுவருடதினத்தை முன்னிட்டு லீவில் சென்றதால், மேற்படி விடுதியில் தங்கியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பட்டினியால வாடினர்.

சில நாடாளுமன்ற உறுப்பினர் தாமாகவே சமையல் வேலையில் ஈடுபட்டதாகவும், சிலர் அதிகாலையில் தாமாகவே தேநீர் தயாரித்து அருந்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[வி]

## பிக்குகள் யாழ். வர படையினர் அனுமதி

(கொழும்பு)
பௌத்த பிக்குகளின் யாழ். விஜயத்துக்கு பாதுகாப்புப் படையினர் அனுமதியளித்துள்ளனர்.

அநுராதபுரத்திலிருந்து இக்குழுவினர் விமானம் மூலம் யாழ்ப்பாணம் செல்லவுள்ளனர். இதற்கான பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூட்டுப்படைத் தலைமை தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து அநுராதபுரத்துக்கு இப்பௌத்த குழுவினர் ரயில் மூலம் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## மீன் பிடிப்பதற்கு ராணுவத்தினர் தடை

[மட்டக்களப்பு]
மட்டு. ஆரையம்பதிவாவியில் மீன்பிடிக்க இராணுவத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேலும் பல இடங்களிலும் மீன்பிடிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இத்தடையினால் இப்பகுதியிலுள்ள மீனவர்கள் வெகு

(4ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு சட்டம்

[கொழும்பு]
மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் நாளை 23ம் திகதி காலை 6-00 மணி தொடக்கம் 24ம் திகதி காலை 6-00 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படும் என்று கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

[ரி]

## புலிகள் கடல் ஆதிக்கத்தை விஸ்தரித்து வருகிறார்கள்

[லண்டன்]
விடுதலைப்புலிகள் இலங்கை வடபகுதி கடற்பிராந்தியத்தில் குறிப்பாக பாக்குநீரிணைப்பகுதியில் தமது கடல் ஆதிக்கத்தை விஸ்தரித்து வருகிறார்கள் என்று பி. பி. ஸி. தனது செய்திக்கணிப்பில் தெரிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திராகாங்கிரஸ் கமிட்டியிலிருந்து ஐவர் ராஜினமா!

[புதுடில்லி]
இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்கமிட்டியிலிருந்து 3 அமைச்சர்கள்உட்பட 5பேர் இராஜினமா செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரின் அரசியல் செயலர் விஜேந்திரபிரசாத், அக

[4-ம பக்கம் பார்க்க]

## கடல் பகுதி பாதுகாப்பை பலப்படுத்துமாறு உத்தரவு

(கொழும்பு)
மாதகல், பருத்தித்துறை வல்வெட்டித்துறை கடற்பிராந்தியங்களில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு கடற்படைதளபதி கடற்படையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இக் கடற்பிராந்தியங்களில் புலிகள் பெருந்தொகையான கடற்கண்ணிகளை விதைத்துள்ளதாகவும் கடற்படையினர் மீது தாக்குதலை நடத்த புலிகளுக்கு மாதகல் ஒரு கேந்திர ஸ்தானமாக

(4-ம் பக்கம் பார்க்க)

## சோதனைச் சாவடியில் துன்புறுத்தல் அதிகரிப்பு

[வவுனியா]
வவுனியா தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் தமிழ் பிரயாணிகள் மீதான துன்புறுத்தல் அதிகரித்துவருகிறது.

இச்சாவடியால் வரும் பொதுமக்கள் கடுமையாக சோதனை செய்யப்படுவதுடன் அவர்கள் எடுத்துவரும் சில பொருட்கள் ராணுவத்தாலும் தமிழ் குழுக்களாலும் பறிமுதல் செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

# வரி விளம்பரம்


### விற்பனைக்கு

வொண்டர்லயிட் பவுடர் 550g—275g மற்றும் நுளம்புத் திரி மொத்த விற்பனைக்கு உண்டு. புஸ்பா & Co, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ–2091)

A/L கடந்தகால வினாவிடை (உயர் கல்விப் பதிப்பக வெளியீடு) 1–5 வரை தமிழ், கணிதம், தம்பிராசா 7–ம் சமூகக் கல்வி – சந்திரசேகரம் 7–ம், 8–ம் சுகாதாரக் கல்வி செல்வநாயகம் பிரான்சிஸ் காரைக்கால் அம்மையார் புராணம் கானல்வரி (உ. வே. சாமிநாத ஐயர் உரை) ரமணிச்சந்திரன், லக்ஷ்மி நாவல்கள், பாலாஜி புத்தகசாலை, 27, மின்சார நிலைய வீதி, 15/5 முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
[ஏ–2092]

### தேவை

சைக்கிள் திருத்துவதில் அனுபவம் உள்ள ஒருவர் தேவை. விபரங்களுக்கு நேரில். S. M. அந்தோனிப்பிள்ளை, சில்லாலை. (சி–6188)

### வைத்திய சேவை

பெண்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் ஆகியோருக்கும் முறிவு, நெரிவு, சதை நெரிவு, கண்டல் முதலிய சகலவித ரோகங்கட்கும் நிவாரணம் பெற நாடுங்கள். அமுதா வைத்திய நிலையம், டாக்டர் திருமதி அ. ஸ்ரீபதி D. A. M. [Cey] [சமாதான நீதவான்], 15, இராசாவின் தோட்டம் ஒழுங்கை, [குயின்பத்மாவீதி], யாழ்ப்பாணம், [சி–6189]

### பரீட்சை (ஆண்டு 5, 4)

ஆண்டு–5 (1991) புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 23-04-92வியாழன்மு ப. 7-00, மு. ப. 11–00 நடைபெறும், ஆண்டு 4 பரீட்சை 26-04-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப, 11-00 நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். [சி–6191]

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர்நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ்ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி 6040)


## செயலக ஊழியர் இரத்ததானம்

(மானிப்பாய்)

யாழ். செயலக ஊழியர்கள் 10 பேர் கடந்த 20ந் திகதி யாழ். போதனா வைத்திய சாலைக்குச் சென்று இரத்த தானம் செய்தனர். (71)

## மாதாந்த உதவிப்பணம்

(மானிப்பாய்)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுஜன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த பகுதிகிராமசேவை அலுவர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

இத்துடன் காசநோய், தொழுநோய், புற்றுநோயாளர்களுக்கான கொடுப்பனவுகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

ஆடு, மாடு, கோழி


## தூக்க நோயால் இறக்கின்றன

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் கடும் வெப்பத்தல் ஆடு, மாடு, கோழிகள் ஒரு வித தூக்க நோயால் இறந்து விடுகின்றன.

கைதடி, சாவகச்சேரி, அச்சுவேலி, மணிப்புரி, தொல்புரம், மூளாய் சுழிபுரம், மாசியப்பிட்டி போன்ற இடங்களில் கடும் வெப்பத்தை தாங்க முடியாமல் ஆடுகள், மாடுகள் கோழிகள் இறந்துவருகின் கின்றன. (154)–56


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வேலாயுதம் விஜயகுமார்**
**(குமார்)**
பருத்தித்துறை

| | |
|---|---|
| **மண்ணில்:** | **விண்ணில்:** |
| 31 - 05 - 1961 | 04 - 05 - 1991 |

திதி: 22 - 04 - 1992

வேதனை உனக்குண்டோ எம் — சகோதரனே
வேம்பாய் கைததததுவோ எம் — சகோதரனே
வெல்லமுடியாது உன் சோகம்
வெறும் மண்ணாகிப் போனதுவோ உன்காலம்

உற்றார், உறவினர் அனைவரும் தவறாது பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தாய், சகோதரர்கள், மருமக்கள், பெருமக்கள்.

அத்தியடி,
பருத்தித்துறை.

(சி–6190)


# தேநீர்ச்சாலை ஊழியர்களுக்கு பயிற்சி வழங்க ஏற்பாடு

[பண்டத்தரிப்பு]

உணவகங்களிலும், தேநீர்ச் சாலைகளிலும் மற்றும் ஹோட்டல்களிலும் உணவு சிற்றுண்டி வகைகளைப் பரிமாறும் ஊழியர்களுக்கு சுகாதார சம்பந்தமான பயிற்சியளித்துச் சான்றிதழ் வழங்கும் திட்டமொன்றை யாழ்- சுகாதார திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

இப்பயிற்சியைப் பெற்றுச் சான்றிதழ்களைப்பெறும் ஊழியர்கள் மட்டுமே உணவகங்கள், ஹோட்டல்கள தேநீர்ச் சாலைகள் ஆகியவற்றில் உணவு பரிமாறும் கடமைக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (72)

## பண்டத்தரிப்பில் உணவக ஊழியருக்கு 26-ம் திகதி பயிற்சி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பட்டின பகுதியிலுள்ள உணவகங்கள், தேநீர் சாலைகள் ஆகியவற்றில் உணவு, சிற்றுண்டி ஆகியவற்றை பரிமாறுவோர்களுக்கான பயிற்சிவகுப்பு ஒன்று எதிர்வரும் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பண்டத்தரிப்புசந்தையிலுள்ள பட்டின உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட உணவு, மருந்துபரிசோதகர் திரு ஈ. மகாதேவன் இதில் கலந்துகொண்டு பயிற்சி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவார், இதற்கான ஒழுங்குகளை பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் திரு. எம். இராசதுரை செய்துள்ளார். [72]

## இன்று

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையல் இன்று 22ம் திகதி புதன்கிழமை திரு. ந. கணேசமூர்த்தி தலைமையில் ஐக்கிய விளையாட்டு சழக தெரிவுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

## பொங்கலும் தீமிதிப்பும்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை பெரியதமபிரான் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று புதன் கிழமை மாலை 7 மணியளவில் ஆரம்பமாகி நாளை வியாழக்கிழமை 'தீ மிதிப்புடன்' நிறைவுபெறவுள்ளது. வருடந்தோறும் நடைபெறும் இவ் விழாவில் ஒவ்வொரு முறையும் பெருமளவு பக்தாகள இங்கு கூடுவதும் வழக்கம்.

## ஆசிரியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்]

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர்களையும், ஆசிரியர் மாணவர்களையும் ஏப்ரல் மாதச் சம்பளத் தினைப் பெற்றுக் கொள்வதற்கு இன்று புதன்கிழமை மு. ப. 9-00 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கும நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு. ப. 9–00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கும் தவறாது சமூகம் தரும்படி அதிபர்கள் கேட்டுள்ளனர்.

## மே தினம் சு. க. ஏற்பாடு

(கொழும்பு)

அரசுக்கு எதிரான சக்திகளை ஒன்றுதரட்டி மேதினத்தை நடத்துவதற்கான முயற்சிகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போது ஈடுபட்டு வருகிறது என்று தெரிவிக்கப் படுகிறது. (மா)

## கண்டெடுக்கப்பட்ட வவுச்சர்

(யாழ்ப்பாணம்)

மிருசுவிலைச் சேர்ந்த ஆர். சதாசிவப்பிள்ளையின் ஏப்ரல் மாதப் பென்சன் வவுச்சர் யாழ். நகரைச் சேர்ந்த வ. சந்திரதாஸ் என்பவரால் மிருசுவிலில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## புதிய பொலிஸ் நிலையம்

(கொழும்பு)

சம்மாந்துறையைச் சேர்ந்த வீரமுனையில் 100 பொலிசாரைக் கொண்ட புதிய பொலிஸ் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [சு]

## இலக்கிய போட்டி

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறை சனபதி படிப்பகத்தில் வெள்ளி விழாவைமுன்னிட்டு இலக்கியப் போட்டி ஒன்றை நடாத்த தீர்மானித்துள்ளார்கள்.

சிறுகதை, கட்டுரை, கவிதை போட்டிகளுக்கான ஆக்கங்கள் மே மாதம் 15 ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டுமென்று அறிவித்துள்ளார். (சு)

## தந்தை செல்வா நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 15வது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் இம்மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4–30 மணிக்கு நடைபெறவுள்ளது, (சு)


தென்மராட்சி பகுதியில்
எமது விநியோக முகவராக

## அறிவகம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

நியமித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்களுக்குத் தேவையான சகலவிதமான

**TASTY பொருட்களையும்**

மொத்தமாகவும் சில்லறையாகவும்
கட்டுப்பாட்டு விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

**TasteLine Industries (Pvt) Ltd**

No. 14, Seenier Lane, Jaffna. (ஏ-2088)



## இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## இறுதிப் பரீட்சை 1989, 1990, 1991.

கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பாடநெறிகளுக்கான பரீட்சை எதிரில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதிகளில் ஆரம்பமாகும் என பரீட்சை ஆணையாளர் அறிவிததுள்ளார்.

| பயிற்சிநெறி | பரீட்சை ஆரம்பமாகும் திகதி |
|---|---|
| 1. உயர் தேசிய கணக்கியல்/ வர்த்தகவியல் டிப்ளோமா 3-ம் ஆண்டு | 1992 - 05 - 04 |
| 2. தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (N. C. T.) Electrical, Civil Mechanical, Q. S. | 1992 – 05 - 11 |
| 3. உயர் தேசிய கணக்கியல்/வர்த்தகவியல் டிப்ளோமா 4–ம் ஆண்டு | 1992/05/18 |
| 4. படம் வரைதல் தொழில் பயில்வோர் சான்றிதழ் | 1992/06/16 |
| 5. N. C. A. T. சான்றிதழ்/உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 2–ம் வருடம் (புதிய பாடத்திட்டம்) | 1992/06/08 |
| 6. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 3-ம் ஆண்டு (புதிய பாடத்திட்டம்) | 1992/06 22 |

பரீட்சை ஆரம்பமாகும் திகதிக்கு முதல் அலுவலக நாளில் உரிய பகுதித் தலைவரிடம் தமது மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டைக் காட்டித் தமது பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர்
தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(ஏ–2093)

# விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு மதகுருமாரின் பங்களிப்பு துணைநிற்கவேண்டும்

## இந்துக்குருமார் மத்தியில் தமிழ்மாறன் உரை

(உடுவில்)

''விடுதலைப்புலிகள் எந்த ஒரு மதத்தையும் சார்ந்தவர்களல்லர். அவர்கள் தமிழ் மக்களின் விடிவுக்காகப் போராடுபவர்கள் எவருக்கும் எதிரானவர்களல்ல. குறிப்பாக எந்த மதத்துக்கும் எதிரானவாகளுமல்லர். எனவே, சமுதாயத்தில் உயர் ஸ்தானத்தில் வைத்து எண்ணப்படுபவர்களாகிய இந்து குருமார் எமது இயக்கத்தின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் வேண்டிய ஆலோசனைகளையும் ஆசிகளையும் ஒத்துழைபுக்களையும் வழங்கவேண்டும்''

கோண்டாவிலுள்ள யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக செயலகத்தில் நடைபெற்ற 'தமிழீழ இந்துமத குருமார் ஒன்றியம்' அங்குரார்ப்பண கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப்புலிகளின் தமிழீழ அரசியல் பொறுப்பாளர் திரு. தமிழ்மாறன் (மூர்த்தி) இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து கலந்துகொண்ட பிராமண குருமார்கள் மத்தியில் 'பிராமணர்களின் அந்தஸ்தும் விடுதலைப் போராட்டத்தில் அவர்களின் பங்களிப்பும்' பற்றி திரு. தமிழ்மாறன் எடுத்துக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், அரசியல் என்பது மக்கள் வாழ்வோடு இணைக்கப்பட்டது. மதமும் அதுபோலத்தான். மக்களின் வாழ்வோடு இணைந்துபட்ட அரசியலையும் மதத்தையும் விட்டு எவரும் பிரிந்துபோக முடியாது. அந்தவகையில் மதகுருமாரின் பங்களிப்பு எமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு துணைநிற்கவேண்டும், ஏனைய மதகுருமார்கள் குறிப்பாக பௌத்த குருமார் அரசியலுக்கு வழங்கிவரும் ஒத்துழைப்பும், ஆதரவும்போல இந்துமத குருமாராகிய பிராமணர்கள் எமது இயக்கத்துக்கு ஆதரவு அளிக்கவேண்டும். எமது இனத்தின் விடுதலைக்காக நாம் போராடுகின்றோம். அதே வேளையில் எம்மை எதிரிக்கு காட்டிக் கொடுத்து அடிமைகளாக வாழ விரும்பும் ஒரு கூட்டத்தினரும் இருக்கின்றனர். மகாத்மாகாந்தி, யேசுநாதர் காலத்தில் இருந்தே காட்டிக் கொடுக்கும் இனத்துரோகிகள் வாழ்ந்துதான் வருகின்றனர். தமிழினத்தின் திறமைகளையும் பெருமைகளையும் பணத்துக்காகவும் சுயநலத்துக்காகவும் மாற்றானுக்கு வழங்கி அவனின் அடிமைகளாக பலர் வாழ்கின்றனர். கொழும்பிலும் வெளிநாடுகளிலும் இவர்கள் தம் சேவைகளை விற்கின்றனர். எமது மண்ணுக்காகவும், தன்னை வளர்த்த நாட்டுக்காகவும் தன் திறமையை வழங்காது மூவாயிரத்துக்கும் மேற்பட்ட வைத்தியர்கள் வெளிநாடுகளில் சேவைபுரிகின்றனர்.

உலக அரசுகள் ஒரு இனம் பிரிந்துபோவதையோ சுதந்திரம் பெறுவதையோ பெரும்பாலும் விரும்புவதில்லை. எமது போராட்டத்தை அழிக்க இந்திய அரசு படைகளை அனுப்பியபோது எமது இயக்கத்தில் 2000 பேர் மட்டுமே இருந்தனர். அவர்கள் தோல்வியுடன் திரும்பிய போது 7000 போராளிகளுள் எம்முடன் இருந்தனர்.

இந்தியாவின் நடவடிக்கைகள் எம்மை அழிப்பதற்கு பதிலாக வளர்க்கவே செய்தன. இந்திய நாட்டில் கூட இன்னும் பூரண சுதந்திரம் மக்களுக்கு வழங்கப்படவில்லை தமிழ்நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோர் கூட இன்றும் இந்திக்காரனின் கைப்பொம்மைகளாகவே செயற்படுகின்றனர்.

விடுதலைப் போராட்டத்தில் மக்களின் செல்வாக்குப்பெற்ற மதகுருமார், ஆசிரியர்கள், கிராமசேவையாளர்கள், சனசமூகநிலையம், கிராமமுன்னேற்றசங்கம்போன்ற பொது ஸ்தாபனங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம்.

இந்துமத குருமார்களின் சங்கம ஒன்றை ஆரம்பிக்கும நோக்குடன் பிரம்மஸ்ரீ வாமதேவக்குருக்கள் [நயினாதீவு], கருணாகர குருக்கள் [யாழ்ப்பாணம்], சுப்பிரமணிய குருக்கள் [மாவிட்டபுரம்], நாகேந்திர குருக்கள் [நயினாதீவு], யோகசுந்தர குருக்கள் [அளவெட்டி], சுப்பிரமணிய குருக்கள் [கொக்குவில்], சந்திரகாந்த சர்மா ஆகியோர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (109)

## பத்திரிகை செய்திக்கு ஆயர் மன்றம் மறுப்பு

[கொழும்பு]

அம்பாறை பிரதேசத்திலுள்ள ஏனைய மதத்தவரை கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்வதில் கத்தோலிக்க திருச்சபைக்கு எந்தவித தொடர்பும் இல்லையென கத்தோலிக்க ஆயர்மன்ற செயலாளர் பேரருட் திரு. ஓஸ்வல்ட் கோமிஸ் தெரிவித்துள்ளார்.

அம்பாறை பிரதேசத்தில் பலாத்காரமாகவும், தந்திரமாகவும் மதமாற்றம் நடைபெற்று வருவதாக கொழும்பு பத்திரிகைகளில் வந்த பல செய்திகளைத் தொடர்ந்து ஆயர் இவ்வாறு மறுப்பறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். [மா]

## விவசாய புனர்வாழ்வு திட்ட கடனுதவி வழங்கப்பட உள்ளது

[உடுவில்]

விவசாய புனர்வாழ்வு செயற்திட்டக் கொடு கடன் உதவித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கும் கடனுதவிகள் வழங்கப்பட உள்ளன.

இனப் பிரச்சினையால் பாதிப்புக்குட்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்கென இவ்விவசாய கொடுகடன் உதவிகள் வழங்கப்பட உள்ளன.

இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளினூடாக கடனுதவிகள் வழங்கப்படும். பயிர்ச்செய்கை,கால்நடை வளர்ப்பு, மீன்பிடித் தொழில், விவசாய உபகரணங்கள் கொள்வனவு, விவசாயம் சம்பந்தமான தொழில்துறைகள் ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இக்கடன் வழங்கப்படும்.

இப் பிரதேசங்களில் வாழும் பாதிப்படைந்த மக்கள் பின்வரும் முயற்சிகளுக்காக கடனுதவி பெற்றுக்கொள்ளலாம்.

குறுகியகால பயிர்ச்செய்கைகள், வாழை, கரும்பு, மரமுந்திரிகை தோட்டப்பயிர்கள். நிரந்தர பயிர்கள் செய்கைபண்ணல், பசுமாடு, கோழி, பன்றி, ஆடு, வாத்து போன்ற கால்நடைகள் வளர்த்தல், மரப் படகுகள், பைபர் கிளாஸ் வாங்குதல், டீசல் எஞ்சின் வாங்குதல், மீனவ உபகரணங்கள், உதிரிப் பாகங்கள், தோணிகள் கொள்வனவுசெய்தல், தெளிகருவிகள் வாங்குதல், இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் வாங்குதல், விவசாயம் சம்பந்தமான உபகரணங்கள் அறுவடை இயந்திரங்கள் கொள்வனவு செய்தல்.

மற்றும் நெல்குற்றும் இயந்திரங்கள், மீன் பதனிடும தொழில், தும்புத் தொழில், தேனீ வளர்ப்பு, மரவள்ளி மா தயாரிப்பு, மரமரிதலுக்கான இயந்திரக் கொள்வனவு போன்ற கிராமிய கைத்தொழில் நடவடிக்கைகளை வழங்கவும் கடன்கள் வழங்கப்பட உள்ளன. [109]

## சங்கானைப் பிரதேசபுதுவருட விளையாட்டுபோட்டி முடிவுகள்

(சித்தன்கேணி)

புதுவருடத்தையொட்டி வலி, மேற்கு சங்கானைப்பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகள் யாவும் சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்றது.

உதவி அரசாங்க அதிபர் செல்வி றாபினி கனகரத்தினம் இறுதிநாள் நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைத்தார்.

7 பேர் கொண்ட 12 ஓவர்களைக்கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் சங்கானை யுப்பிற்றர்விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது எல்லே விளையாட்டுப போட்டியில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கிளித்தட்டு (தாச்சி) போட்டியில் சுளிபுரம் சத்தியா விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது ஆறுபேர்கொண்ட கரபந்தாட்டப் போட்டியில் (ஓவர்கேம்) தொல்புரம் மத்தி விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கான வலைப் பந்தாட்டப்போட்டியில் சங்கானை ப. நோ. கூ. சங்க விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கயிறு இழுத்தல் போட்டியில் சங்கானை ப. நோ. கூ. சங்க விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தக் கழகங்களுக்கான பரிசில்கள் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள புதுவருட விழாவின்போது வழங்கப்படவுள்ளன. (137)

## கற்பித்தல் உபகரணங்களை பேணிப்பாதுகாக்கவேண்டும்

(வட்டுக்கோட்டை)

''சகல பாடசாலைகளிலும் கற்பித்தல் உபகரணங்கள பேணிப் பாதுகாக்கப்படுவதோடு, தேவையானபோது அவற்றைப் பயன்படுத்தவும வேண்டும். இன்று நடைபெறும் கற்பித்தல் உபகரணக் கண்காட்சியானது பண்டத்தரிப்புக் கோட்டப் பிரிவில் முதல்முதலாக நடத்தப்படுகின்றது. மூன்றாண்டுத் திட்டத்தில் ஆண்டு 1-5 வரையுள்ள வகுப்புக்களின் முதலாவது செயற்திட்டமாக அமைகின்றது. இப்பாடசாலையின் கற்பித்தல் உபகரணக் கண்காட்சிபோன்று ஏனைய பாடசாலைகளும் நடத்தவேண்டும்.''

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கற்பித்தல் உபகரணக் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. மு. திருநீலகண்டசிவம் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதி அதிபர் செல்வி நே. இராமலிங்கம் தலைமையில் இக்கண்காட்சி நடைபெற்றது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. மு. திருநீலகண்டசிவம் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது: கற்பித்தல் துறையிலே ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களும் தத்தமது பாடங்களுக்கான கற்பித்தல் உபகரணங்களைத் தயாரித்து வைத்திருப்பதோடு மாணவர்களின் நன்மைகருதி அவற்றைத் தேவையான நேரங்களில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்'' என்றார்.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல், சுழிபுரம் கொத்தணி அதிபர் திரு. செ. பத்மநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். (139)

## கட்டுத் துவக்கு வெடித்துக் காயம்

[யாழ்ப்பாணம்]

மிருக வேட்டைக்குக் காட்டுப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த கட்டுத் துவக்குவெடிக்கிலக்காகி படுகாயமடைந்த விஸ்வமடு உடையார்கட்டைச் சேர்ந்த எஸ். சிவசுப்பிரமணியம் (வயது-33) யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார், (56)

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வரும் லீக் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய முதல் ஆட்டத்தில் வைக்கிங்ஸ் கழகத்தை எதிர்த்து சென். ரேக்ஸ் கழகம் மோதும். 2-வது ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் கழகத்தை எதிர்த்து சென். மேரிஸ் கழகம் மோதும். (வி)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம்:

சுன்னாகம் ஸ்கந்தா அணியை எதிர்த்து வளர்மதி அணி சுன்னாகம் ஸ்கந்தா கல்லூரி மைதானத்தில் மோதும்.

## இராசிபலன்

22/04/1992

புதன்கிழமை

(தமிழுக்கு சித்திரை 10)

பஞ்சமி மு. ப, 11-20வரை மூலம் மு. இ. 8-33 வரை, பரணயோகம், இராகுகாலம் பகல் 12-00 முதல 1 30வரை, சுபநேரம் மாலை 4-30 முதல் 6-00 வரை,

மேடம்: சத்துரு பீடை, நடைக்கஸ்டம், வீண்பழிகேட்டல்.

இடபம்: பிறரால் ஏமாற்றம். அவமதிப்பு, மனச்சோர்வு.

மிதுனம்: சினேக நன்மை, மனமகிழ்ச்சி, புத்திரர்சுகம்.

கடகம்: காரிய சித்தி, வாக்கு வசீகரம், நிலைப்பிரிவு.

சிங்கம்: உடல் ரோகம், வேலையாள் துன்பம், அதிக செலவு.

கன்னி: இடையூறுகள், பெண்மூலமான இடர், இனசன பிரிவு,

துலாம்: வாக்கு வசீகரம், நன்மதிப்பு, தனவிருத்தி.

விருச்சிகம்: தொழில் பகை, பயண அலைச்சல், யோசனை.

தனுசு: சத்துருவை வெல்லுதல், கல்வித் திறமை, பிரயாசம்.

மகரம்: சயனசுகக்குறைவு, காரிய தடை, அவமதிப்பு.

கும்பம்: வெற்றிவாகை, இனசன மகிழ்ச்சி, தெய்வீக செலவு.

மீனம்: குடும்ப சுகம் பெரியோர் சந்திப்பு, மாமியார் பாசம்.

—ஜோசியர்

## மியன்டாட் பாக். கப்டன்

(கராச்சி)

இங்கிலாந்து செல்லும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவராக யாவிட் மியன்டாட்டும். உபதலைவராக சலீம் மாலிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

உலக கிண்ண தொடரில் தோள் மூட்டில் ஏற்பட்ட விலகல் காரணமாக இம்ரான் கான் இப்போட்டித்தொடரில் கலந்துகொள்ளவில்லை. இத்தொடரில் 5 டெஸ்ட் போட்டிகளும் 5 சர்வதேச ஒருநாள் போட்டிகளும் 3 நாள் போட்டிகளும் நடைபெறும். (சி)

## கிரிக்கெட் மே. இந்திய அணி தோல்வி அடையும் நிலையில்

(பிறிஜ்ரவுண்)

மே. இந்திய அணிக்கும் தெ ஆபிரிக்க அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மே. இந்திய அணி தோல்வியைத் தழுவும் நிலை ஏற்பட்டுள்ளது.

மூன்றாம் நாள் முடிவில் மே. இந்திய அணி தனது 2வது இனிங்ஸில் 7 விக்கெட் இழப்பிற்கு 184 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதல் இனிங்ஸில் மே. இந்தியா 262 ஓட்டங்களைப் பெற்றது.

தெ. ஆபிரிக்கா முதல் இனிங்ஸில் 345 ஓட்டங்களைப் பெற்றது. (சி)

# இரு விடயங்களை நாடாளுமன்றில் விவாதிக்க எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையில் பெரும் பிரச்சினையாக எழுந்துள்ள இரண்டு விடயங்களை நாடாளுமன்றத்திற்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு எதிர்கட்சிகள் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தை கேட்டுள்ளனர்.

முன்னாள் பிரதிபொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல அரசுக்கு எதிராக தெரிவித்த குற்றச்சாட்டுகள் 1989-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தல் பற்றி தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கை ஆகிய விடயங்கள் குறித்து உடனடியாக விவாதம் அவசியம் என்று எதிர்கட்சிகள் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கேட்டுள்ளதாக எதிர்க்கட்சி பிரதம கொரடா ரிச்சேட் பத்திரன தெரிவித்தார்.

## யாழ். மாவட்டத்திற்கு ஒரு கோடி 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது

[யாழ்ப்பாணம்]

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு நிதி ஒதுக்கீட்டில், யாழ். மாவட்டத்துக்கு ஒரு கோடியே 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில், யாழ். செயலகத்தில நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நிதியில் கூடுதல் பணத்தை, விவசாயம், மீன்பிடித்தல், சிறு கைத்தொழில் போன்றவற்றுக்கே செலவு செய்வதென்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (வி)

## வங்கியாளர் பரீட்சை முடிவு

[கொழும்பு]

இலங்கை வங்கியாளர் நிறுவனம் நடாத்திய வங்கி முகாமைத்துவ டிப்ளோமா பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

## கலை நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவின் யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மாவீரர் கலை அரங்கில், மாதாந்தக் கலை நிகழ்ச்சி இன்று நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றவிருக்கின்றனர். அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

## யாழ். விஞ்ஞான சங்க முதலாம் வருட அமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க முதலாம் வருட அமர்வு, நாளை 23ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பௌதிக மண்டபத்தில் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பொதுத் தலைவர், பிரிவுத் தலைவர்களின் உரைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆகியன மூன்று நாளும் நடைபெறும்.

இறுதி வளர்ப்பு, பூச்சிக்கட்டுப்பாடு, நன்னீர் நிலைகள், கட்டிடப் பிரச்னைகள், துவிச்சக்கரவண்டியில் போகும் போது நுரையீரலின் செயற்பாடு, யாழ்ப்பாணத்தில் வருவாய் தரும் டயிர்களின் செயற்பாடு ஆகியவை தொடர்பான கருத்தரங்குகள் நடைபெறும்.

## தமிழ் இளைஞரை கொலைசெய்த சுவிஸ் வாசிக்கு 18 மாத சிறைத்தண்டனை

(ஜெனிவா)

சுவிஸில் தமிழ் இளைஞர் ஒருவரை படுகொலை செய்த 'சுவிஸ் குத்துச் சண்டை வீரர் ஒருவருக்கு நீதிமன்றம் 18 மாதச சிறைத் தண்டனை விதித்துள்ளது.

தனிப்பட்ட பகை ஒன்றின் காரணமாக இலங்கை தமிழ் இளைஞர் ஒருவரை மேற்படி குத்துச் சண்டை வீரர் கொலை செய்திருந்தார். இந்தக் குற்றச்சாட்டை இவர் நீதிமன்றில் ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து இவருக்கு 18 மாத ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் வழக்கு மற்றும் செலவுத் தொகையாக 4,500 சுவிஸ் பிராங்குகள் (ஒருலட்சத்து இருபதாயிரம் ரூபா) வழங்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (சி)

புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் ஒரு நடவடிக்கையாக கடந்த இரு வாரங்களில் இலங்கை கடற்படையினரின் பல கப்பல்கள் விடுதலைப் புலிகளின் கடற் கண்ணியால் அல்லது தற்கொலைக்கு தயாரான புலிப் போராளிகளால் நாசமாக்கப்பட்டுள்ளதாகவும் பி. டி. ஐ. மேலும் தெரிவித்தது. [க]

## செஞ்சிலுவை சங்கத்திற்கு அமெரிக்க நிதி உதவி

[நியூயோர்க்]

அமெரிக்க அரசு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்கமிட்டிக்கு 126மில்லியன் ரூபாவை தென்னாசிய வேலைத்திட்டத்திற்காக வழங்கியுள்ளது.

இந்த நிதி இலங்கை, ஆப்கானிஸ்தானில் பயன்படுத்தப் படவுள்ளது. புதுடில்லியில் உள்ள ஐ. சி. ஆர். சி. பிராந்திய குழுவுக்கும் கொடுக்கப்படும்.

தடுப்புக்காவலில் இருப்போருக்கு உதவவும், காணாமற் போனோரைதேடிபிடிப்பதிலும் வைத்திய சேவைக்கும் இந் நிதி உதவும் என தெரிவிக்கப்படுகிறது. (சி)

## நடமாடும் செயலகம்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடமாடும் செயலகம் இம்மாதம் 25ம் திகதி நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. ஆர். தருமகுலசிங்கம் தலைமையில் முள்ளியவளைப் பகுதியில் இச்செயலகம் செயற்படவுள்ளது.

இச்செயலகத்தில் சகலதிணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டு அப்பகுதி மக்களின் குறைபாடுகளை தீர்த்து வைப்பர். [150]

## ஒய்வூதியக் கொடுப்பனவு

[புங்குடுதீவு]

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுவோர்க்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவு நேற்று 21ம் திகதி தொடக்கம் யாழ். அடைக்கல மாதா கோவிலுக்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருகின்றது.

## காரைநகர் மாணவர்களுக்கு

[யாழ்ப்பாணம்]

காரைநகர் மாணவர்களுக்கான ஒக்டோபர், பெப்ரவரி மாதங்களுக்குரிய மதியஉணவு முத்திரைகள் நாளை 23ம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு விக்ரோறியாக் கல்லூரியில் வைத்து வழங்கப்படும்

அதிபர்கள், ஆசிரியர்கள் சமூகம் தந்து மாணவர்களுக்குரிய முத்திரைகளை வழங்குமாறு கொத்தணி அதிபர் தெரிவித்துள்ளார். சகலமாணவர்களும் தவறாது தமது முத்திரைகளை பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## சாரணர் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த குருளைச் சாரணர்கள், சாரணர்கள், திரிசாரணர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். இப் பயிற்சி ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் தொடர்ந்து நடைபெறும்.

பௌத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது,

அமரபுர நிக்காய பீடாதிபதி டலபபிட்டி சிறி சித்தாத்த மகாநாயக்க தேரோ தலைமையில் 12 பௌத்த பிக்குகள் அடங்கியகுழு இன்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அம்மை நோய் பரவுகிறது

[ஊர்காவற்றுறை]

செம்பியன்பற்று கிராமத்தில கடும் வரட்சியின் காரணமாக அம்மை நோய் பரவி வருவதாக அங்கிருந்து வந்தவர் தெரிவித்தார். [59]

## இடமாற்றத்திற்கு கிராமசேவையாளர் விண்ணப்பிக்கலாம்

[முல்லைத்தீவு]

கிராம சேவை உத்தியோகத்தர்கள் தமது சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் வாய்ப்பாக வடக்கு கிழக்கு மாகாண சபை ஒரு சுற்று நிருபத்தை அனுப்பியுள்ளது.

முல்லைத்தீவு செயலகத்திற்கு வந்த இச்சுற்று நிருபத்தின்படி சொந்த இடங்களுக்கு செல்ல விரும்பும் வடக்கு கிராம சேவகர்கள் கிழக்கு மாகாணசபைக்கு உடன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. [150]

## மருந்துகள் விநியோகம்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு இவ்வருட இரண்டாம் காலாண்டிற்கான மருந்துவகைகள் கடந்த திங்கட்கிழமையன்று யாழ். மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினரால் நேரடியாக வான் வண்டி மூலம் கொண்டு சென்று வழங்கப்பட்டுள்ளன. [72]

அரசுக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரேரணைக்கு ஆதரவு தேடும் முகமாக சுதந்திரக் கட்சியினர் தமிழ் கட்சிகள் உட்பட பல கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்திவருகின்றனர்.

இது அரசுக்கு எதிராக கொண்டுவரப்படும் நான்காவது நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பது குறிப்பிடத்தக்கது, (சி)

வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முன்னணியில் முக்கிய பிரமுகர்களாக பல முஸ்லிம்கள் இருக்கின்றனர். மேலும் தமிழர், சிங்களவர் சிலரும் இதில் உள்ளனர்.

இதேவேளை வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பை தெரிவுக் குழுமுன் பல கட்சிகள் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## புத்தாண்டு விழா

[வட்டுக்கோட்டை]

வலி-மேற்குப் பிரிவுச் செயலகம், சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வலி-மேற்குப் பிரதேச செயலர் றூபினி கனகரத்தினம் தலைமையில் புத்தாண்டு விழாவை நடத்துகின்றது.

புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் ரோந்து சென்ற பொலிஸ் படையினர் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் நடத்தியதில் ஒரு பொலிஸ்கான்ஸ்டபிள் பலத்த காயம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது. [மா]

## பனங்கட்டி தொழிற்சாலை

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் தெல்லிப்பழையில் புதிதாக பனங்கட்டித் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் கள்ளை வீணாக்காமல் அதனை பதநீராக மாற்றி பனங்கட்டி உற்பத்திக்கு உபயோகிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இந்தியஅதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றதும் இவ்விடயம் தொடர்பாக உறுதியான ஒரு முடிவு இதுவரையில் எடுக்கப்படாமல் போனதும் தெரிந்ததே.

இதேவேளையில் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனைப் பாதுகாக்க இலங்கை அரசு முயற்சி செய்வதாக இந்திரா காங்கிரஸ் கட்சிப் பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். (க)

மீன் பிடிப்பதற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்திற்கு அஞ்சிய நிலையிலும்மீன்பிடிக்கச் சென்ற பலர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு நேசமலர்

திருமதி முருகேசு நேசமலர் அவர்கள் 21 - 04 - 92 செவ்வாய்க்கிழமை நண்பகல் காலமானார். இவர் திருவாளர்கள் மு. பாக்கியநாதன், மு. பாக்கியராசன், திருமதி பாரிவள்ளல் சுமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: க. பாரிவள்ளல்

'பாக்கியமலர்'
வதிரி

[சி-6197)

சுடல்பகுதி

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகவும் கடற்படைத் தளபதி எச்சரிக்கை செய்துள்ளார்.

இக்கடற்பகுதியில்புலிகளின் நடமாட்டத்தினால் பலாலியில இலங்கை விமானப்படை விமானங்கள் இறங்குவதற்கு பாதிப்பு ஏற்படலாமென்றும் அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

இந்திரா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்பட்டேல். வேளாண்மைத் துறை அமைச்சர் பல்ராம் ஜாக்கர், சட்டம் நீதித்துறை அமைச்சர் விஜய்பாஸ்கர ரெட்டி, பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆஸாத் ஆகியோரே இராஜினாமா செய்தவர்களாவர்.

## நூலக ஆலோசனைக் குழு

(உடுவில்)

வலிகாமம் - தெற்குப் பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்தில் இயங்கிவரும் பொதுநூலகத்தின் நூலக சேவையை திறம்பட நடாத்தவென நூலக ஆலோசனை குழு ஒன்று உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. இ. கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது. (109)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சுண்டிக்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81